திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, ஊராட்சி ஒன்றியங்களை பிரிப்பதற்கு, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் வேண்டுகோள் விடுத்தால் பரிசீலிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். எனவே, சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, அரசு அதனை அமுல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லுகின்றபோது, உடன்பாடான பதிலைத் தான் சொன்னேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு பதிவுரு எழுத்தர் மற்றும் ஆய்வக உடனாட்கள் பதவி உயர்வு.

1.—(*வினா எண். 9726)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் துறைகளில் பணிபுரிந்து வரும் பதிவுரு எழுத்தர்கள் (Record Clerks) மற்றும் ஆய்வக உடனாட்கள் (Lab Attenders) பதவி உயர்வு கேட்டு அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்ததுபோல், அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவிற்கும் கோரிக்கை வைத்திருந்தார்கள். அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு இது குறித்து பரிந்துரை வழங்கியிருக்கிறதா ? அந்தப் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு உள்ளதா ? இந்த விவரங்களை நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

1987 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அமைச்சுப் பணி-விதி 3 (ஜி)-ன்படி அலுவலக உதவியாளர்கள், பதிவுரு எழுத்தர் மற்றும் அடித்தளப் பணியில் பணிபுரிபவர்கள் 5 ஆண்டுகள் பணி முடித்து, குறுமக் கல்வித் தகுதியும் பெற்றிருந்தால், அத்துறையின் முதுநிலை வரிசைக் கிரமப்படி நேரடி நியமன முறை மூலம் 9 இளநிலை உதவியாளர்களை பணியமர்த்திய பிறகு 10-வது இடத்தை பணி மாற்றல் முறை மூலம் இளநிலை உதவியாளர் பதவி உயர்வு கொடுக்கலாம். பதிவுரு எழுத்தர்கள் பொது சார்நிலைப் பணி விதியின் கீழ் வருகின்றவர்கள். இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதியின்கீழ் வருபவர். தமிழ்நாடு அரசின் நான்காம் ஊதியக் குழுவின் பரிந்துரையிலுள்ள சில குறைபாடுகளைக் களையும் பொருட்டு நியமனம் செய்யப்பட்ட ஒரு நபர் குழு, பதிவுரு எழுத்தர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் பொருள் பற்றி பரிந்துரைக்கையில் இளநிலை உதவியாளர்களுக்கான காலிப் பணியிடங்களில் 50 விழுக்காடு பதிவுரு எழுத்தர் மற்றும் பிற இனங்களின் பதவி உயர்வுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்றும், இவ்வாறாக ஒதுக்கப்பட்ட 50 விழுக்காடு—பாதியினை குறிப்பாக பதிவுரு எழுத்தர்களின் பதவி உயர்வுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இப்பரிந்துரையினை சீராய்ந்த உயர் மட்டக் குழு பதிவுரு எழுத்தர்களுக்குப் பதவி உயர்வுக்கான விகிதாச்சாரத்தை 25 விழுக்காடுகளாக உயர்த்தலாமென்றும், தற்பொழுது கடைபிடிக்கப்பட்டு வரும் 10 விழுக்காடு விகிதாச்சாரம் அலுவலக ஊழியர் மற்றும் பிறர் பொருட்டு கடைபிடிக்கப்படலாமென்றும், மேலும் பட்டதாரிகள் பதிவுரு எழுத்தர்கள் இருப்பார்களேயானால் அவர்களை இந்த 25 விழுக்காடு விகிதாச்சார ஒதுக்கீட்டிற்குள் கொண்டு வராமல், இந்த விழுக்காட்டிற்கும் மேலாக பதவி உயர்வு அளிக்கப்படலாமென்றும் பரிந்துரைத்துள்ளது. இப்பொருள் பற்றி தமிழ்நாடு தேர்வாணையத்தின் கருத்து பெறப்பட்டு, அது அரசின் பரிசீலனையில் உள்ளது. அது பற்றி முடிவெடுத்து அரசு அறிவிக்கும்.

தமிழகத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள்.

2—(*வினா எண். 11557)—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான நிலம் தமிழகத்தில் மொத்தம் எவ்வளவு?

(ஆ) அரசு நிலங்களின் ஆக்கிரமிப்புக்களை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?